செய்தி வெளியீடு எண் : 12 நாள் : 16.04.2019

தேனி மாவட்டம்
பாராளுமன்ற பொதுத்தேர்தல்-2019
மாற்றுத்திறனாளிகள் எளிதில் சென்று வாக்களித்திட ஏதுவாக சக்கர நற்காலிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது
மாவட்ட தேர்தல் அலுவலர் (ம) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், பாராளுமன்ற பொதுத்தேர்தல்-2019 மாற்றுத்திறனாளிகள் எளிதில் சென்று வாக்களித்திட ஏதுவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சக்கர நற்காலிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் (ம) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.04.2019) பார்வையிட்டார்.

பார்வையிட்ட பின், மாவட்ட தேர்தல் அலுவலர் (ம) மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில்,

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, பாராளுமன்ற பொதுத்தேர்தல்-2019 மற்றும் ஆண்டிபட்டி, பெரியகுளம் (தனி) ஆகிய சட்டமன்ற தொகுதிகள் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு (18.04.2019) அன்று நடைபெறவுள்ளதால், மாவட்டத்தில் உள்ள அனைத்து நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மையங்களில் மாற்றுத்திறனாளிகள் எளிதில் சென்று வாக்களித்திட ஏதுவாக 538 சக்கர நாற்காலிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் உள்ள 22 பேரூராட்சிகள், 130 ஊராட்சிகளுக்கு 538 வாக்குச்சாவடி மையங்களில் இன்று சக்கர நாற்காலிகள் புதிதாக வாங்கப்பட்டு, அனைத்து வாக்குச்சாடி மையங்களுக்கு அனுப்பட்டு வருகிறது. மீதமுள்ள 386 வாக்குச்சாவடி மையங்களுக்கு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள சக்கர நாற்காலிகள் பெறப்பட்டு சம்பந்தப்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே, மாற்றுத்திறனாளிகள் வாக்குச்சாவடி மையங்களுக்கு சென்று சக்கர நாற்காலியினை பயன்படுத்தி தங்களது வாக்குகளை பதிவு செய்து ஜனநாயக கடமையை நிறைவேற்றிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் (ம) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பா.திலகவதி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சகுந்தலா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) விஜயலட்சுமி உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.